சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 185 29.12.2025 MONDAY MARGAZHI : 14 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 185 29.12.2025 திங்கள்கிழமை மார்கழி : 14 விலை : ரூ.5/–

3 இளைஞர்கள் தலைமையேற்க முன் வர வேண்டும்: அதானி பேச்சு

4 சிக்கன், கறி சில்லி சிக்கன் விற்பனை செய்யும் இடங்களாக மாறிவரும் சித்தையன்கோட்டை பயணியர் நிழற்குடை

2 வங்கதேசத்தில் தொடரும் ஹிந்துக்கள் கொலை: அமெரிக்கா கண்டனம்

## "தமிழ் உலகின் பழமையான மொழி;

# "தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்துள்ளது"

## பிரதமர் மோடி பேச்சு

**புதுடெல்லி: டிச.29–**

"தமிழ்மொழி உலகின் மிகவும் பழமையான மொழி. தமிழ் இலக்கியம் மிகவும் வளமானது. இன்று தேசத்தின் பிற பாகங்களிலும் கூட குழந்தைகள் இளைஞர்கள் மத்தியில் தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது" என மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

மனதின் குரல் நிகழ்ச்சியின் 129வது அத்தியாயத்தில் நேற்று (டிச.28) பிரதமர் மோடி ஆற்றிய உரையில், "2025ன் பல கணங்கள் நமக்குப் பெருமிதத்தைச் சேர்த்தன. இந்த ஆண்டு ஆபரேஷன் சிந்தூர், அனைத்து இந்தியர்களுக்கும் பெருமையின் அடையாளமானது.

2025ம் ஆண்டு விளையாட்டுத் துறையில், நமது ஆடவர் கிரிக்கெட் அணியானது ஐசிசி சேம்பியன்ஸ் கோப்பையை வெற்றி பெற்றார்கள். பெண்கள் கிரிக்கெட் அணியும் கூட, முதன்முறையாக உலகக் கோப்பையை வென்றெடுத்தார்கள். பார்வைத்திறனில்லா மாற்றுத் திறனாளிப் பெண்களுக்கான டி20 உலகக் கோப்பையை வென்று வரலாறு படைத்தார்கள்.



விஞ்ஞானம் மற்றும் விண்வெளித் துறைகளிலும் கூட இந்தியா மிகப்பெரிய எல்லையைத் தாண்டியிருக்கிறது. சுபான்ஷு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையம் வரை சென்ற முதல் இந்தியர் ஆனார்.

மிகுந்த நம்பிக்கையோடு உலகம் இன்று இந்தியாவை உற்று கவனிக்கிறது. இந்தியாவின் மீது உலகு வைத்திருக்கும் நம்பிக்கையின் மிகப்பெரிய காரணம் நமது இளைஞர்கள் சக்தியே. விஞ்ஞானத் துறையில் நமது சாதனைகள், புதிய புதிய கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பத்தின் பரவல் ஆகியவை அனைத்தும் உலக நாடுகளை மிகவும் கவர்ந்திருக்கின்றன.

கடந்த மாதம் ஃபிஜியில் ஒரு பள்ளிக்கூடத்தில் முதன்முறையாக தமிழ் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினத்தன்று குழந்தைகளுக்குக் கிடைத்த மேடையில் அவர்கள் தங்களுடைய மொழியின் பெருமை குறித்து தங்கு தடையின்று உரையாற்றினார்கள்.

குழந்தைகள் தமிழில் கவிதைகளை உரைத்தார்கள், சொற்பொழிவு ஆற்றினார்கள், தங்களுடைய கலாச்சாரத்தை, மெத்த தன்னம்பிக்கையோடு மேடையில் வெளிப்படுத்தினார்கள்.

தமிழ்மொழி உலகின் மிகவும் பழமையான மொழி. தமிழ் இலக்கியம் மிகவும் வளமானது. இன்று தேசத்தின் பிற பாகங்களிலும் கூட குழந்தைகள் இளைஞர்கள் மத்தியில் தமிழ் மீதான ஆர்வம் அதிகரித்திருக்கிறது. இதுதான் மொழியின் பலம், இதுவே தேசத்தின் ஒற்றுமை.

2025ல் மனதின் குரலின் கடைசிப் பகுதி இது, நாம் 2026 ம் ஆண்டில், இதே உற்சாகம் பேருக்கத்தோடு, உள்ளார்ந்த உணர்வோடு நமது மனதின் குரலில் கண்டிப்பாக ஈடுபடுவோம். வளர்ச்சியடைந்த இந்தியா என்ற நமது உறுதிப்பாடு கண்டிப்பாக மெய்யாகும். இந்த நம்பிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் பலமடைந்து வருகிறது. 2026ஆம் ஆண்டு, இந்த உறுதிப்பாடு மெய்யாகும் பயணத்தில் ஒரு முக்கியமான கட்டமாக இருக்கும்" என்று தெரிவித்தார்.



■ தேனி மாவட்டம், 199. பெரியகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தேனிஅல்லிநகரம் நகராட்சி ஆர்.சி உயர்நிலைப்பள்ளியில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் (SIR) பணிகள் தொடர்பாக, நடைபெற்று வரும் சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



## எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது

### 150 குடும்ப அட்டை உள்ள பகுதிகளுக்கும் பகுதி நேர நியாயவிலைக்கடை : அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி

சின்னாளபட்டி, டிச.29-

தமிழகத்தில் எல்லோருக்கும் எல்லாம் என்ற உன்னத நோக்கில் தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. போக்குவரத்து நகரில் நடைபெற்ற நியாயவிலைக்கடை திறப்பு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதுடன் 150 குடும்ப அட்டை உள்ள பகுதிகளுக்கும் பகுதி நேர நியாயவிலைக்கடை திறக்கப்படும் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி உறுதி அளி;த்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், கலிக்கம்பட்டி போக்குவரத்து கழக நகரில் நடைபெற்ற புதிய நியாயவிலைக் கடைத்திறப்பு விழாவிற்கு மாவட்ட ஊரக வளர்சி திட்ட இயக்குநர் பெ.திலகவதி தலைமை தாங்கினார். திமுக மாநில செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோமதி செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அபிராமி கூட்டுறவு சங்க மேலாளர் பரமேஸ்வரி வரவேற்றார். நியாயவிலைக் கடையை திறந்து வைத்து பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கிய பின்பு அவர்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற பின்பு, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களின் நலனை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதனை நோக்கமாகக் கொண்டு "எல்லோருக்கும் எல்லாம்" என்ற உன்னத நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நியாயவிலைக் கடைகள் பிரிக்கப்பட்டு பொதுமக்கள் வசிக்கக்கூடிய வீட்டிற்கு அருகில் விரும்புகின்ற குடிமைப்பொருள் பெற்றுக்கொள்ள வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசினார். நிகழ்சியில் ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக துணைச் செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், வசந்தா கென்னடி, ஒன்றிய மாவட்ட காங்கிரஸ் துணை செயலாளர் மச்சகாளை, திமுக ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் ஜெயராமன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் உலகநாதன், ஆறுமுகம், கோமதி செல்வக்குமார், செட்டியபட்டி ராஜா, அரசு ஒப்பந்த காரர்கள் ஜீசஸ் அகஸ்டீன், மெல்வின், விக்னேஸ்வரன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் பி.என்.போஸ், மாவட்ட தகவல் தொழில்நுட்ட அணி ஒருங்கிணைப்பாளர்கள் வாஞ்சிநாதன், கணேசன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விடுதலை முருகன், ஊராட்சி செயலர்கள் அழகர்சாமி, தண்டபாணி, அம்பாத்துரை செந்தில்குமார் கோட்டைப்பட்டி திமுக நிர்வாகிகள் பாண்டி, செயலாளர் முருகன், நியாயவிலைக்கடை விற்பானையாளர்கள் முத்துலெட்சுமி, பாண்டீஸ்வரி, பாலாஜி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மேல்நிலைத் தொட்டியின் கீழ் 24x7 குடிமகன்களின் பார்....

## சித்தையங்கோட்டை பேரூராட்சி நிர்வாகம் பொதுமக்கள் விஷயத்தில் அலட்சியமாக இருப்பது வேதனை

திண்டுக்கல், டிச.29-

திண்டுக்கல் மாவட்டம் சித்தையங்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட அழகர்நாயக்கன்பட்டியில் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி உள்ளது. அப்பகுதி மக்களுக்கு இஅந்த மேல்நிலைத் தொட்டியின்மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யப் படுகிறது. தொட்டியின் அடியில் உள்ள வால்விலிருந்து தொடர்ந்து நீர் கசிவு ஏற்பட்டு அப்பகுதியில் குளம் போல் தண்ணீர் தேங்கி டெங்கு கொசுக்கள் உற்பத்தி செய்யும் இடமாக மாறி வருகிறது. இதுதவிர அப்பகுதியில் பட்டப் பகலிலேயே குடிமகன்கள் மதுபாட்டில்களுடன் அமர்ந்து மது அருந்தும் நிலை சர்வ சாதாரணமாக மாறி வருகிறது. இது தவிர அப்பகுதியில் குண்டு, சீட்டு விளையாடும் இளைஞர்கள் மேல்நிலை தண்ணீர் தொட்டி வளாகத்தை கழிப்பறையாக மாற்றி வருகின்றனர். தண்ணீர் தொட்டி வளாகம் முழுவதும் குடிபோதையில் குடிமகன்கள் குடித்துவிட்டு விட்டு செல்லும் பாட்டில்களும், பிளாஸ்டிக் கப்புகளும் குவிந்துள்ளன. இதனால் அப்பகுதி துர்நாற்றம் வீசுவதோடு குடிதண்ணீரின் பாதுகாப்பிற்கு கேள்விக் குறியாக உள்ளது.



தமிழகத்தில் சில விஷமிகள் மேல்நிலை தண்ணீர் தொட்டியில் விஷம பொருட்களை கலந்து விடுவதால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டுவரும் நிலையில் சித்தையங்கோட்டை பேரூராட்சி நிர்வாகம் பொதுமக்கள் விஷயத்தில் அலட்சியமாக இருப்பது வேதனை அளிப்பதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். இது குறித்து அப்பகுதியைச் சேர்ந்த ராம்கி கூறுகையில் பாதுகாப்பாக இருக்க வேண்டிய மேல் நிலை தண்ணீர் தொட்டி வளாகம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இந்த தண்ணீர் தொட்டி வளாகத்தை குடிமகன்கள் மினி பாராக மாற்றி வருகின்றனர். இதுகுறித்து பொதுமக்கள் யாராவது கேட்டால் நீ குடிக்காமல் இருந்தால் விட்டுவிடு, நாங்கள் அப்படித்தான் குடிப்போம் என்கின்றனர். பேரூராட்சி நிர்வாகம் பொது மக்கள் நலன் கருதி, பாதுகாப்பான குடி தண்ணீர் வழங்க வேண்டும் என்றார்.

# வங்கதேசத்தில் தொடரும் ஹிந்துக்கள் கொலை: அமெரிக்கா கண்டனம்



வாஷிங்டன், டிச.29-

வங்கதேசத்தில் ஹிந்து மதத்தை சேர்ந்த இரண்டு பேர் கொல்லப்பட்டதற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் கூறியதாவது: வங்கதேசத்தில் அனைத்து வகையான மத வன்முறைகளையும் சந்தேகத்துக்கு இடமின்றி அமெரிக்கா கண்டிக்கிறது. அங்கு வசிக்கும் அனைத்து உறுதி செய்ய சமூக மக்களின் பாதுகாப்பை வங்கதேச இடைக்கால அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை வரவேற்கிறோம். மத சுதந்திரம், கருத்து சுதந்திரம் , அமைதியான கூட்டம் ஆகியவற்றுக்கு அமெரிக்கா ஆதரவு அளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இதனிடையே அமெரிக்க எம்பி ரோ கண்ணா, வெறுப்பு மற்றும் மதவெறியின் இந்த மோசமான செயல்களுக்கு எதிராக குரல்கள் எழுப்பப்பட வேண்டும் எனக்கூறியிருந்தார்.கடந்த சில நாட்களுக்கு முன்னர் திபு சந்திர தாஸ் என்ற ஹிந்து மத இளைஞரை கும்பல் ஒன்று கொடூரமாக அடித்து கொன்றது. இந்த சம்பவத்தின் அதிர்ச்சி அடங்குவதற்குள், ராஜ் பாரி மாவட்டத்தில் அம்ரித் மண்டல்(29) என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டார். இந்த சம்பவங்களுக்கு வங்கதேச இடைக்கால அரசு கண்டனம் தெரிவித்து இருந்தது.

இதனிடையே, வங்கதேசத்தில் ஹிந்துக்கள் கொல்லப்படுவதை கண்டித்து, உலகின் பல்வேறு இடங்களில் போராட்டம் நடந்தது.

இது போன்ற சம்பவங்களை தடுக்க சர்வதேச அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, பிரிட்டன் தலைநர் லண்டனில் உள்ள வங்கதேச தூதரகம் முன்பு வங்காள ஹிந்து ஆதர்ஷ சங்கம் போராட்டம் நடத்தியது. நேபாளத்திலும் பல இடங்களில் போராட்டம் நடந்தன. பல இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

டில்லி, கோல்கட்டா ஆகிய நகரங்களிலும் போராட்டம் நடந்தது. ஹிந்துக்கள் கொல்லப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ள மத்திய அரசு, அவர்களின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளது

# சம வேலைக்கு சம ஊதியம் கோரி 3வது நாளாக போராட்டம்: சென்னையில் இடைநிலை ஆசிரியர்கள் கைது



சென்னை, டிச.29-

சம வேலைக்கு சம ஊதியம் வழங்கக்கோரி, சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய இடைநிலை ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டனர்.ஊதிய முரண்பாட்டை களையக் கோரி இடைநிலை ஆசிரியர்கள், சென்னை டிபிஐ வளாகத்தை நேற்று முன்தினம் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். தொடர்ந்து அவர்கள் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் 1400க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு, மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட் டனர். அதைத்தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களை தமிழக அரசு பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. அதன்படி, இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் இயக்கத்தின் மாநில தலைவர் ரெக்ஸ் ஆனந்தகுமார், பொதுச்செயலாளர் ஜே.ராபர்ட் உள்ளிட்ட நிர்வாகிகள் தலைமைச் செயலகத்தில் பள்ளிக்கல்வித்துறை செயலர் ப.சந்திரமோகன், தொடக்கக் கல்வி இயக்குநர் பி.ஏ.நரேஷ் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், எழும்பூரில் உள்ள மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலக வளாகத்தில் அமர்ந்து 500க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், போராடிய ஆசிரியர்களை குண்டுக்கட்டாகத் தூக்கி போலீஸ் வாகனங்களில் ஏற்றி வெளியேகொண்டு சென்றனர். நேற்று ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கைதான நிலையில் மாலையில் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.இந்த நிலையில், சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வலியுறுத்தி சென்னையில் இடைநிலை பதிவுமூப்பு ஆசிரியர்கள் 3வது நாளாக இன்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீஸார் கைது செய்து வாகனத்தில் ஏற்றி அருகில் உள்ள திருமண மண்டபத்துக்கு அனுப்பி வைத்தனர். கைது நடவடிக்கையை கண்டித்து ஆசிரியர்கள் சாலை மறியலில் ஈடுபட்டதால், அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 4.42 லட்சம் பேர் விண்ணப்பம்; ஒரே நாளில் 2.56 லட்சம் பேர் மனு



சென்னை, டிச.29-

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இதுவரை 4.42 லட்சம் பேர் மனுக்களை சமர்ப்பித்து உள்ளதாக தமிழக தலைமை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கு பின்னர் வெளியிடப்பட்ட பட்டியலில் 97 லட்சத்து 37 ஆயிரத்து 831 வாக்காளர்கள் நீக்கப்பட்டனர். 66 லட்சம் பேர் இடம் மாறியவர்களாக காட்டப்பட்டுள்ளனர். தவறுதலாக நீக்கப்பட்டவர்கள் மீண்டும் தங்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க ஒரு மாதம் அவகாசம் அளிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு ஜன.18ம் தேதி கடைசி நாளாகும். மேலும் சிறப்பு தீவிர திருத்தப்படிவத்தை சரியாக பூர்த்தி செய்யாத 10 லட்சம் வாக்காளர்களுக்கு தேர்தல் கமிஷன் நோட்டீசும் அனுப்பி வருகிறது.இந் நிலையில் வாக்காளர் பட்டியலில் பெயர்களை சேர்க்க, திருத்தம் செய்ய 4 நாட்கள் சிறப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இன்றுடன் 2 முகாம்கள் முடிந்துவிட்ட நிலையில், தற்போது வரை 4 லட்சத்து 42 ஆயிரத்து 70 பேர் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க கோரி விண்ணப்ப மனு அளித்துள்ளதாக தமிழக தலைமை தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனை தெரிவித்து 4 ஆயிரத்து 741 பேர் மனு அளித்துள்ளனர். நேற்று முன்தினம் வரை 1 லட்சத்து 85 ஆயிரம் பேர் பெயர் சேர்க்க விண்ணப்பித்து இருந்தனர். நேற்று ஒரே நாளில் மட்டும் 2 லட்சத்து .56 ஆயிரம் பேர் விண்ணப்ப மனு அளித்துள்ளனர்.



# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் ஜன.3 வரை மழைக்கு வாய்ப்பு

சென்னை, டிச.29-

தமிழகத்தில் நாளை முதல் ஜன.3ம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (டிச.29) டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

இதர தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

டிச.30 முதல் ஜன.1ம் தேதி வரை தென் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வட தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஜன.2, 3 தேதிகளில் தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) நாளை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும். நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் மலைப்பகுதிகளில் ஓரிரு இடங்களில் இரவு அல்லது அதிகாலை வேளையில் உறைபனி ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான குளிர் அளவுகளின்படி அதிகபட்சமாக சமவெளிப் பகுதியான திருத்தணியில் 17.6 டிகிரி, மலைப்பகுதியான ஊட்டியில் 4.2 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். குறைந்தபட்ச வெப்பநிலை 21 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கக்கூடும்.

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிமீ வேகத்திலும், இடையிடையே 65 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். எனவே இப்பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# "தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்றவர் விஜயகாந்த்" முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி



சென்னை, டிச.29-

"தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற விஜயகாந்தின் நற்பணிகளை நினைவுகூர்கிறேன்" என்று தேமுதிக தலைவர் விஜயகாந்தின் நினைவுநாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கப் பதிவில் பகிர்ந்த ட்வீட்டில், "ஏழை மக்கள் மீது பெரும் பரிவு கொண்டு, அனைவருக்கும் உதவும் தன் உயர்ந்த உள்ளத்தால் தமிழ் மக்களின் அளவில்லாத அன்பைப் பெற்ற எனது அருமை நண்பர் தேமுதிக நிறுவனர் கேப்டன் விஜயகாந்தின் நற்பணிகளை நினைவுகூர்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு டிச.28ம் தேதி தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் காலமானார். அவரது உடலுக்கு லட்சக்கணக்கானேர் திரண்டு அஞ்சலி செலுத்திய நிலையில், இறுதிச் சடங்கில் அரசு மரியாதையும் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து சென்னையில் கட்சித் தலைமையகத்தில் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு, அங்கு நாள்தேறும் பூஜையும், அன்னதானமும் செய்யப்படுகிறது.

இந்நிலையில், விஜயகாந்தின் இரண்டாமாண்டு நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, அரசியல் தலைவர்கள் அவரின் நினைவுகளை பகிர்ந்து வருகின்றனர்.

முன்னதாக இன்று காலை முதலே சென்னை கோயம்பேட்டில் அவரது நினைவிடத்துக்கு தேமுதிகவினர் ஏராளமானோர் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிசாமி, மத்திய இணையமைச்சர் எல்.முருகன், பாஜக முன்னாள் அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

# டிச.31ல் இபிஎஸ் தலைமையில் அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்

சென்னை, டிச.29-

டிச.31ம் தேதி எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழக முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக எம்ஜிஆர் மாளிகையில், 31.12.2025 காலை 10 மணிக்கு, மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.



இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வரும் 2026ல் நடைபெறவுள்ளது. ஏப்ரல் அல்லது மே மாதத்தில் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே 'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற பெயரில் எடப்பாடி பழனிசாமி அதிமுக சார்பில் முதற்கட்ட தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி நடத்தி வருகிறார். இந்நிலையில், தேர்தல் கூட்டணிகளை முடிவு செய்யும் பணியிலும் அதிமுக ஈடுபட்டு வருகிறது. பாஜக தமிழக மேலிட பொறுப்பாளர் பியூஷ் கோயல் அண்மையில் எடப்பாடியை சந்தித்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.இந்நிலையில் வரும் 31ம் தேதி அதிமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதில் தேர்தல் தொடர்பாக பிரதானமாக ஆலோசனைகள் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# காங்கிரஸ் வெறும் கட்சியல்ல: சொல்கிறார் ராகுல்



புதுடில்லி:, டிச.29-

" காங்கிரஸ் என்பது வெறும் கட்சியல்ல. அது இந்தியாவின் ஆன்மாவாக திகழ்கிறது," என அக்கட்சி எம்பி ராகுல் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் 140வது நிறுவன தினத்தை முன்னிட்டு ராகுல் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: காங்கிரசின் நிறுவன தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு காங்கிரஸ் தொண்டருக்கும் வாழ்த்துகள். அந்த வரலாற்று பாரம்பரியத்துக்கும், இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தவர்களுக்கும், அரசியலமைப்பின் அடித்தளத்தை அமைத்து ஜனநாயகம், மதசார்பின்மை, சமூக நீதி மற்றும் சமத்துவத்தின் மதிப்புகளை வலுப்படுத்திய அந்த மாபெரும் தியாகிகளுக்கு நாங்கள் மரியாதை செலுத்துகிறோம். காங்கிரஸ் என்பது வெறும் அரசியல் கட்சியல்ல. அது இந்தியாவின் ஆன்மாவின் குரல். ஒவ்வொரு பலவீனமான, ஒவ்வொரு நலிந்த, ஒவ்வொரு கடின உழைப்புக்கும் துணை நிற்கிறது. வெறுப்பு, அநீதி மற்றும் சர்வாதிகாரத்திற்கு எதிராக உண்மை, தைரியம் மற்றும் அரசியலமைப்பின் பாதுகாப்பிற்காக இன்னும் வலுவாக போராட உறுதி பூண்டுள்ளோம். இவ்வாறு அந்த அறிக்கையில் ராகுல் கூறியுள்ளார்.

# உ.பி.,யை விட தமிழகம் நிலைமை மோசம்; திமுகவை மீண்டும் சீண்டிய காங்கிரஸ்!

புதுடில்லி, டிச.29-

உத்தரபிரதேச மாநிலத்தை விட தமிழக நிலைமை மோசமாகியுள்ளது. கடன் தொகை அதிகரித்துள்ளது என காங்கிரஸ் தகவல் பகுப்பாய்வு குழுத் தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி தெரிவித்துள்ளார்.



திருப்பூரில் நிருபர்களிடம் திமுக எம்பி கனிமொழி, 'அதிமுக ஆட்சியை விட்டு வெளியேறியபோது தமிழகம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்தது. எந்த வளர்ச்சியும் இல்லாமல், கடன் சுமையால் சூழப்பட்டிருந்தது; இப்போது, திமுக தமிழகத்தை முன்னேறிய, வளர்ந்த மாநிலமாக மாற்றியுள்ளது' என்று கூறியிருந்தார்.இதனை மேற்கோள் காட்டி சமூக வலைதளத்தில், பிரவீன் சக்கரவர்த்தி வெளியிட்டுள்ள பதிவில் கூறி இருப்பதாவது:

அனைத்து மாநிலங்களை விடவும் அதிக கடன் நிலுவையில் உள்ள மாநிலம் தமிழகம். 2010ம் ஆண்டில், உ.பி., தமிழகத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக கடனுடன் இருந்தது. இப்போது, உ.பி.,யை விட தமிழகத்துக்கு அதிக கடன் உள்ளது.

வட்டிச் சுமையின் சதவீதத்தில், பஞ்சாப் மற்றும் ஹரியானாவுக்குப் பிறகு தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது. தமிழகத்தின் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம், இரண்டுமே கொரோனாவிற்கு முந்தைய நிலைகளை விட இப்போது அதிகமாக உள்ளது. தமிழகத்தின் கடன் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இவ்வாறு பிரவீன் சக்கரவர்த்தி கூறியுள்ளார்.

இவர், ஏற்கனவே தவெக தலைவர் நடிகர் விஜய்யை சந்தித்து பேச்சு நடத்தியவர். தமிழகத்தில் திமுக கூட்டணியில் காங்கிரஸ் இருக்கிறது. அகில இந்திய அளவில் இண்டி கூட்டணியில் இரு கட்சிகளும் உள்ளன. இத்தகைய நிலையில், நடிகர் விஜய்யுடன், அதுவும் ராகுலுக்கு நெருக்கமானதாக கருதப்படும் பிரவீன் பேச்சு நடத்தியது சர்ச்சையை கிளப்பியது.இப்போது அதே பிரவீன் மீண்டும் திமுகவினரை சீண்டும் வகையில் சமூக வலைதளத்தில் பதிவு வெளியிட்டுள்ளார்.

# தமிழகத்தின் கடனை திமுக இரட்டிப்பாக்கி உள்ளது; காங்., நிர்வாகி கருத்துக்கு அண்ணாமலை வரவேற்பு



சென்னை, டிச.29-

தமிழகத்தின் கடனை திமுக இரட்டிப்பாக்கி உள்ளது என தமிழக பாஜ முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார்.

உத்தரபிரதேச மாநிலத்தை விட தமிழக கடன் நிலைமை மோசமாகியுள்ளது. கடன் தொகை அதிகரித்துள்ளது என காங்கிரஸ் தகவல் பகுப்பாய்வு குழுத் தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி கூறி இருந்தார். இதனை அண்ணாமலை வரவேற்று உள்ளார்.அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: பொய் சொல்வதில் கோபாலபுரம் குடும்பம் முனைவர் பட்டம் பெற்றுள்ளது. இண்டி கூட்டணியில் உள்ள கூட்டாளிகளில் ஒருவர் தரவுகளைப் புரிந்து கொண்டு கடன் குறித்து பகிரங்கமாகப் பேசுவது வரவேற்கத்தக்கது.வெறும் ஐந்து ஆண்டுகளில், திமுக தமிழகத்தின் கடனை இரட்டிப்பாக்கியுள்ளது, அதே நேரத்தில் பற்றாக்குறைகளை மறைப்பதற்கும், பெருகிய வளர்ச்சிக் கதைகளை முன்னிறுத்துவதற்கும் கடன்களை வசதியாகப் பயன்படுத்துகிறது. இருப்பினும், பெரிய கேள்வி என்னவென்றால், திமுகவிற்கும் காங்கிரசுக்கும் இடையே உண்மையில் என்ன நடக்கிறது? ஐக்கிய முற்போக்கு கூட்டணி சகாப்தத்தின் மோதல், சண்டை மீண்டும் உருவாவது போல் தெரிகிறது. இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.



## “கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதலை கண்டிக்காத விஜய் எப்படி தமிழக மக்களை காப்பாற்றுவார்?” மமக

மதுரை, டிச.29-
வட மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை பகிரங்கமாக கண்டிக்காத விஜய் எப்படி தமிழக மக்களை காப்பாற்றுவார் என மனித நேய மக்கள் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

மதுரையில் சமூகநீதி மாணவர் இயக்கத்தின் தலைமை செயற்குழு இன்று நடைபெற்றது. இதில் பங்கேற்ற பின் மனித நேய மக்கள் கட்சி எம்எல்ஏ ப.அப்துல்சமது செய்தியாளர்களிடம் கூறியதாவது: டெல்லி உள்பட பல்வேறு வட மாநிலங்களில் கிறிஸ்துமஸ் விழாவை கொண்டாடிய கிறிஸ்தவர்கள் மீது சங்பரிவார் அமைப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். கிறிஸ்தவ மக்களின் நம்பிக்கையை சீர்குலைக்கும் வகையில் சங்பரிவார் அமைப்பினர் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர். இதை தவெக தலைவர் விஜய் கண்டிக்கவில்லை. அவரது கட்சியை சேர்ந்த சிலர் பொதுவாக கண்டித்துள்ளனர். கிறிஸ்தவர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களை விஜய் பகிரங்கமாக கண்டிக்கவில்லை.

விஜய்யின் கொள்கை எதிரிகள் ஆட்சியில் இருந்து கொண்டு தொடர்ந்து சிறுபான்மை மக்களுக்கு எதிராக, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக, கல்வி, மாநில உரிமை, சமூகநீதி, மாநில உரிமைகளுக்கு எதிராக செயல்பட்டு வருவதுடன் பல்வேறு பிரச்சினைகளையும் கொடுத்து வருகின்றனர். கொள்கை எதிரிகளுக்கு எதிராக தைரியமாக பேச துணிவில்லாதவராக விஜய் உள்ளார். இவர் ஆட்சிக்கு வந்து எல்லா மக்களையும் பாதுகாப்பார் என்பதை எப்படி நம்ப முடியும்.

விஜய்யை வைத்து தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்கு வித்திட முடியுமா என சங்பரிவார் அமைப்புகள் நினைக்கின்றன. இதற்கு விஜய்யும் துணை போகிறார். இதனால் அவருக்கு ஒய் பிரிவு பாதுகாப்பு அளித்துள்ளனர். இதில் ‘பாசிசமா, பாயாசமா’ என நக்கல் பேச்சு வேறு. ஒரு காலத்தில் ஜோசப் விஜய் என கிண்டல் செய்தவர்கள் தற்போது கரூரில் 41 பேர் உயிரிழந்த விவகாரத்தில் விஜய்யை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உயர் அதிகாரிகள் பலர் பதவியை ராஜினாமா செய்து தவெகவில் சேர்கின்றனர். இப்படியான நடவடிக்கைகளை பார்க்கும் விஜய் பின்னணியில் பாஜக, ஆர்எஸ்எஸ் இருந்து கொண்டு தமிழகத்தில் அவரை இயக்குவது தெளிவாக தெரிகிறது. இதை மக்களும் உணர்ந்துள்ளனர். இதனால் விஜய்க்கு எதிராக மக்கள் களத்தில் இறங்குவார்கள். நாமும் களத்தில் இறங்குவோம். விஜய் முகத்திரையை அகற்றுவோம்’ இவ்வாறு அவர் கூறினார்.



## ஜம்முவில் 30க்கும் மேற்பட்ட பாக் பயங்கரவாதிகள்; உளவுத்துறை எச்சரிக்கை

ஜம்மு, டிச.29-
ஜம்முவில் 30க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. இதனால் குளிர்கால நடவடிக்கைகளை ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் குளிர்காலத்தை பயன்படுத்தி பயங்கரவாதிகள் ஊடுருவலை தடுக்க, பாதுகாப்பு படையினர் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளனர். ஜம்மு பகுதியில் 30க்கும் மேற்பட்ட பாகிஸ்தான் பயங்கரவாதிகள் செயல்படுவதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

உறைபனியை பயன்படுத்தி பயங்கரவாதிகள் உள் நுழைவதை தடுக்க, மலைப்பகுதிகள், காடுகள் மற்றும் தொலைதூர பள்ளத்தாக்குகளில் ராணுவ ரோந்துப் படையினர் தொடர்ந்து சோதனை நடத்தி வருகின்றனர். ஜம்மு காஷ்மீர் போலீசார், சிஆர்பிஎப், சிறப்பு நடவடிக்கைக் குழு, வனக் காவலர்கள் மற்றும் கிராமப் பாதுகாப்புக் காவலர்கள் ஆகியோருடன் நெருக்கமான ஒருங்கிணைப்பின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பயங்கரவாதிகளின் செயல்பாடுகளை கண்காணிக்க ட்ரோன்கள், வெப்ப இமேஜர்கள் (thermal imagers) மூலம் சிறப்பு பயிற்சி பெற்ற குளிர்கால போர் பிரிவுகள் ஈடுபட்டுள்ளன. இந்த குளிர்காலத்தில் மீதமுள்ள பயங்கரவாத முகாம்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பொங்கல் நாளில் நடக்க இருந்த பட்டயக் கணக்காளர் தேர்வு மாற்றம்

புதுடில்லி,டே டிச.29-
பொங்கல் நாளில் நடப்பதாக அறிவிக்கப்பட்டு இருந்த பட்டயக் கணக்காளர் தேர்வு மாற்றப்பட்டு உள்ளது. ஜன.19ம் தேதி தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. பட்டயக் கணக்காளர்கள் இடைநிலைத் தேர்வு குரூப் 2 தேர்வின் ஐந்தாம் தாள், பொங்கல் நாளில் (ஜன.15) நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. பண்டிகை நாளில் தேர்வு நடைபெறுவதற்கு தமிழகத்தில் இருந்து கடும் எதிர்ப்புக்குரல் எழுந்தது. தேர்வை வேறு ஒரு நாளில் மாற்றி நடத்த வேண்டும் என்று கோரிக்கைகளும் எழுந்தன.இந் நிலையில், ஜன.15ம் தேதி நடப்பதாக இருந்த தேர்வு மாற்றப்பட்டு உள்ளதாக பட்டயக் கணக்காளர்கள் கழகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.இதுபற்றிய அறிவிப்பும் வெளியிடப்பட்டு உள்ளது.

அதன் படி, ஜன,15க்கு பதில் ஜன.19ம் தேதி தேர்வு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. மற்றைய தேர்வு தேதிகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. தேதி மாற்றப்பட்டாலும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள தேர்வுக் கூட நுழைவுச்சீட்டுகள் செல்லுபடியாகும். மஹாராஷ்டிரா உள்ளாட்சித் தேர்தல் காரணமாக தேர்வு தேதி மாற்றப்பட்டு உள்ளதாக தமது அதிகாரப்பூர்வ அறிவிப்பில் பட்டயக் கணக்காளர்கள் கழகம் குறிப்பிட்டு உள்ளது.

## இளைஞர்கள் தலைமையேற்க முன் வர வேண்டும்: அதானி பேச்சு




பாரமதி, டிச.29-
''இந்தியாவின் இளைஞர்கள் அறிவாற்றல் யுகத்துக்கு தலைமையேற்க முன்வர வேண்டும்,'' என பிரபல தொழிலதிபர் கவுதம் அதானி கூறியுள்ளார். மஹாராஷ்டிரா மாநிலம் பாரமதியில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் 'சரத்பவார் செயற்கை நுண்ணறிவு திறன் மையத்தை' திறந்து வைத்த தொழிலதிபர் சரத்பவார் பேசியதாவது: இந்தியாவின் வலிமை என்பது மக்கள், நிறுவனங்கள் மற்றும் நீண்டகால பார்வையை ஒன்றிணைக்கும் திறனில் உள்ளது. அதே தெளிவுடன் இப்போது இளம் இந்தியர்கள் வழிநடத்த வேண்டும். அவர்களை திறனை உருவாக்குபவர்களாகவும், அதன் நிபுணர்களாகவும் மாற்றும் வகையில் அதனை அணுகச் செய்ய வேண்டும். தொழில்துறை புரட்சிகள் முதல் இந்தியாவின் சொந்த டிஜிட்டல் மாற்றம் வரை ஒவ்வொரு பெரிய தொழில்நுட்ப மாற்றமும் மனித ஆற்றலை விரிவுபடுத்தியுள்ளது.

சாதாரண குடிமக்களின் கைகளில் நேரடியாக நுண்ணறிவு மற்றும் உற்பத்தித்திறனை ஏஐ வழங்கும் . இதன் மூலம் அனைதது தரப்பு இளைஞர்களும் வளர்ச்சி பெறுவதற்கான வழிவகையை ஏற்படுத்தி உள்ளது.ஏஐ தலைமைத்துவத்தை வெளியாட்களுக்கு வழங்கக்கூடாது. இன்றைய உலகில் பொருளாதார சக்தியையும், தேசிய ஆதிக்கத்தையும் உளவுத்துறை மாற்றி வருகிறது. அந்த நேரத்தில் அல்காரிதம்களுக்காக வெளிநாடுகளை சார்ந்து இருப்பது அச்சத்தை ஏற்படுத்தும்.

தரவுகள், முடிவெடுக்கும் திறன் ஆகியவை தேசிய நலனில் நிலைநிறுத்தப்பட வேண்டும். உள்நாட்டு ஏஐ மாதிரிகள், வலுவான கணினி திறன் மற்றும் மீள்தன்மை கொண்ட நுண்ணறிவு சுற்றுச்சூழல் அமைப்புகளை உருவாக்குவது இந்தியாவின் பொருளாதார பாதுகாப்பு, கலாச்சார நம்பிக்கை மற்றும் சுதந்திரத்துக்கு முக்கியம். இவ்வாறு அவர் பேசினார்.

அதானி நிதியுதவியுடன் செயல்படும் இந்த செயற்கை நுண்ணறிவு மையத்தை 'வித்யா பிரதிஷ்தான்' என்ற கல்வி நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்த கல்வி நிறுவனத்தை சரத் பவார் குடும்பத்தினர் நிர்வகித்து வருகின்றனர். இன்றைய நிகழ்வில் சரத்பவார், அவரது மகள் சுப்ரியா சுலே, மஹாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த மையம் துவங்கப்பட்டுள்ள பாரமதி, சரத்பவார் போட்டியிட்டு வென்ற தொகுதியாகும். தற்போது இந்த தொகுதியில் பவார் மகள் சுப்ரியா எம்.பி.,யாக இருக்கிறார்.



## கடற்படை நீர்மூழ்கிக் கப்பலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பயணம்

புதுடில்லி, டிச.29-
உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ்., வாக்ஷீர் நீர்மூழ்கிக் கப்பலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பயணம் மேற்கொண்டார்.

கர்நாடகாவின் கார்வார் கடற்படைத் தளத்தில் உள்ள முழுக்க முழுக்க உள்நாட்டு தொழில்நுட்பங்களுடன், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஐ.என்.எஸ்., வாக்ஷீர் நீர்மூழ்கிக் கப்பலில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பயணம் மேற்கொண்டார். அவருடன் கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதியும் சென்றார்.

இந்த பயணத்தின் போது, கடலோர பாதுகாப்புப் பணிகளில் நீர்மூழ்கி கப்பலின் பங்கு, அதன் செயல்பாடு, பங்களிப்பு குறித்து அதிகாரிகள் விளக்கினர். இதனைத் தொடர்ந்து நீர்மூழ்கி கப்பலில் இருந்த ஊழியர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் அர்ப்பணிப்புக்காக பாராட்டு தெரிவித்தார்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்தக் கப்பல், இந்தியக் கடற்படையின் தொழில்முறைச் சிறப்பு, போர்த் தயார்நிலை மற்றும் தேசியப் பாதுகாப்பு மீதான அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு பிறகு நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த 2வது ஜனாதிபதி என்ற பெருமையை திரவுபதி முர்மு பெற்றார். 2006ம் ஆண்டு பிப்ரவரி 13ம் தேதி ஆந்திராவின் விசாகப்பட்டினத்தில் நீர்மூழ்கிக் கப்பலில் அப்துல் கலாம் பயணம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.வாக்ஷீர் சிறப்பு இதுதான்!* ஐ.என்.எஸ்., வாக்ஷீர் என்பது, ஸ்கார்பியன் வகை நீர்மூழ்கிக் கப்பலாகும். இது பல வகைகளில் பயன்படக்கூடியது.

* நிலத்தில் இருந்து வரும் ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல்களில் இருந்து செலுத்தப்படும் ஏவுகணைகளை எதிர்க்கும் திறன் இந்த நீர்மூழ்கிக் கப்பலுக்கு உள்ளது. மேலும், உளவு தகவல்களையும் திரட்டும் திறன் கொண்டது.




## இலங்கை சிறையில் இருந்து 61 மீனவர்களை விடுவிக்க மத்திய அரசின் நடவடிக்கை தேவை: முதல்வர் ஸ்டாலின்



சென்னை, டிச.29-
இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் முதல்வர் கூறியிருப்பதாவது: ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 27.12.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்த மற்றொரு சம்பவத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுவது தங்கு தடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவது கவலையளிக்கிறது. இக்கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடிப் படகுகளும், 61 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே எதிர்காலத்தில் இது போன்ற கைது சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும், இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்துகிறேன். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திண்டுக்கல் அருகே கள்ளக்காதல் எதிரொலி : வாலிபர் வெட்டி படுகொலை

திண்டுக்கல், டிச29-
திண்டுக்கல், பழனி பைபாஸ், ராமையன்பட்டியில்திண்டுக்கல், மேட்டுப்பட்டியை சேர்ந்த பழனிச்சாமி மகன் ராஜா(27) என்பவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.தகவல் அறிந்த தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் பாலமுருகன் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று ராஜாவின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரியின் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரணை மேற்கொண்ட போதுதிருமணத்தை மீறிய உறவால் (கள்ளக்காதல்) இந்த கொலை நடைபெற்றதாக போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது





# சிக்கன், கறி சில்லி சிக்கன் விற்பனை செய்யும் இடங்களாக மாறிவரும் சித்தையன்கோட்டை பயணியர் நிழற்குடை

## பேரூராட்சி நிர்வாகம் கண்டுகொள்ளுமா?

சின்னாளபட்டி, டிச.29

சிக்கன், கறி சில்லி சிக்கன் விற்பனை செய்யும் இடங்களாக மாறிவரும் சித்தையன்கோட்டை பேரூராட்சி அழகர்நாயக்கன்பட்டி, பயணியர் நிழற்குடையில் பயணிகள் அமரமுடியாமல் அவதிப்படுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், சித்தையன்கோட்டை பேரூராட்சியில் 15 வார்டுகள் உள்ளன. இதில் அழகர்நாயக்கன்பட்டி செல்லும் வழியில் உள்ள பயணிகள் நிழற்குடையை பயணிகள் பயன்படுத்தமுடியாத நிலை உள்ளது. குறிப்பாக மது அருந்துபவர்கள் அப்பகுதியை ஆக்கிரமித்து மது அருந்துவதாக கூறப்படுகிறது. அது தவிர அருகில் சில்லி சிக்கன் கடை இருப்பதால் பயணிகள் உள்ளே அமர்ந்தாலும், ஒரு சில இடர்பாடுகளால் பயணியர் நிழற்குடையை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், குடிமகன்கள் மாலை நேரங்களில் நிழற்குடை உள்ளே வந்து மது பாட்டில்களை வைத்து மது அருந்துவதாக கூறப்படுகிறது. பேரூராட்சி நிர்வாகத்திடம்; பல முறை புகார் செய்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என கூறப்படுகிறது. மாவட்ட நிர்வாகம் பயணிகள் நிழற்குடை அருகே இருக்கும் கறி விற்பனை செய்யும் கடைகளை அப்புறப்படுத்தி பொது மக்களின் பயன்பாட்டிற்கு பயணியர் நிழற்குடையை கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமேன அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தொப்பம்பட்டி கீரனூரில் தவெக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



தொப்பம்பட்டி, டிச.29-

தொப்பம்பட்டி கீரனூரில் தவெக மத்திய ஒன்றிய செயலாளர் எல்.முகமது அலி ஜின்னா தலைமையில், பல்வேறு கோரிக்கையை முன்வைத்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கழகத்தின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் அவர்களின் ஆலோசனயின்படி, ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயளாலர் எஸ்.கார்த்திக்ராஜன் அவர்களின் தலைமையில், தொப்பம்பட்டி மத்திய ஒன்றிய செயளாலர் எல். முகமது அலி ஜின்னா அவர்களின் ஏற்பாட்டில், கீரனூர் பேரூராட்சி மக்களின் கோரிக்கையை ஏற்று கீரனூரில், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த கோரியும், கீரனூர் பேரூராட்சி 15வது வார்டு அருந்ததியர் சமுதாய மக்களுக்கு மயான வசதி ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழக மாநில ஆளும் அரசிற்கு எதிராக கோஷங்கள் எழுப் பபட்டது.இந்நிகழ்ச்சியில் மாவட்ட, நகர ஒன்றிய சார்பு அணி, கிளை மற்றும் கழக நிகர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை மாவட்ட செயற்குழு உறுப்பினர் முகமது நூர், ஷாஜகான், பேரூர் கழக நிர்வாகிகள் முப ாரக் அலி, ஆனந்த், அஜார், அரவிந்த் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.



# திசையன்விளையில் தேமுதிக நிறுவன தலைவர் விஜயகாந்த் 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி

திசையன்விளை.டிச.29-

திசையன்விளையில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது. திருநெல்வேலி புறநகர் மாவட்டம் திசையன்விளை பேரூராட்சி தேமுதிக சார்பில், தேமுதிக நிறுவன தலைவர் விஜயகாந்த் 2ம் ஆண்டு நினைவு அஞ்சலி கூட்டம் மாவட்ட செயலாளர் விஜி வேலாயுதம் ஆலோசனை படி, திசையன்விளை நேருஜி கலையரங்கம் அருகே நகர செயலாளர் ராஜ்குமார் தலைமையில் நடந்தது. சிறப்பு அழைப்பாளராக ராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் இசக்கிமுத்து கலந்து கொண்டார். விஜயகாந்த் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.பின்னர் நூற்றுக்கணக்கான பேர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் நகர கழக அவைத் தலைவர் சேர்மத்துரை, மாவட்ட பிரதி நிதி கள் செல்வகுமார், பாக்கியநாதன்,பொருளாளர் முத்து துரை, வழக்கறிஞர் மகேஷ், தேமுதிக நிர்வாகிகள் பொன் பாண்டி, முத்துக்குமார், முத்து, ராமச்சந்திரன், பாஸ்கர், வீரசிங், ஜனார்த்தனன் ஒன்றிய மகளிர் அணி தலைவி அன் னம் ,சும தி, இசக்கியம்மாள்,சந்தியா, ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தேமுதிக நகர செயலாளர் ராஜ் குமார் மற்றும் நிர்வாகிகள் செய்து இருந்தனர்.



■ ஈரோடு கொடுமுடி மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி சிவகிரி பகுதியில் மேற்கு மண்டல அமைப்புச் செயலாளர் கே ஏ செங்கோட்டையன் வழிகாட்டுதலின்படி ஈரோடு மாவட்ட செயலாளர் விஜய்பாலாஜி ஆலோசனைப்படி மாற்றுக் கட்சியில் இருந்து விலகி தமிழக வெற்றி கழகத்தில் சிவகிரி பேருர் துணை செயலாளர் பகவான் முன்னிலையில் இணைந்தனர்.



# ஆப்பரேஷன் சிந்தூரில் பயத்தில் உறைந்த பாக்., தலைவர்கள்: அதிபர் சர்தாரி ஒப்புதல்

இஸ்லாமாபாத், டிச.29-

' ஆப்பரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் போது பாக்., ராணுவத்துக்கு மட்டுமல்லாமல், அந்நாட்டு தலைவர்களுக்கும் பயத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனை அந்நாட்டு அதிபர் ஆசிப் அலி சர்தாரி நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது ஒப்புக் கொண்டார்.

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில், ஏப்., 22ல், பாக்., ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில், 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக, மே 7ல், 'ஆப்பரேஷன் சிந்துபர்' என்ற பெயரில், பாகிஸ்தானில் உள்ள ஒன்பது பயங்கரவாத முகாம்களை நம் படைகள் தகர்த்தன. நம் தாக்குதலை சமாளிக்க முடியாமல் பாக்., கெஞ்சியதை அடுத்து, சண்டை முடிவுக்கு வந்தது.

இந்தியாவின் தாக்குதலை கண்டு பாகிஸ்தான் ராணுவத்தினருக்கு மட்டும் அல்லாமல், அந்நாட்டு தலைவர்களுக்கும் பயத்தை ஏற்படுத்தியது தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி கூறியதாவது: ஆப்பரேஷன் சிந்தூர் துவங்கிய நேரத்தில் எனது ராணுவ செயலாளர் அருகில் உடன் இருந்தார். அவர் என்னிடம் வந்து, ' போர் துவங்கிவிட்டது ' எனத் தெரிவித்தார்.ஆனால், அதற்கு நான்கு நாட்களுக்கு முன்னரே விரைவில் போர் துவங்க வாய்ப்பு இருக்கிறது எனத் தெரிவித்து இருந்தேன். இதனால், அவர் புதியதாக இல்லை. அவர் என்னிடம் வந்து, நாம் பதுங்குக்குழிக்குள் சென்று விடுவோம் எனத் தெரி வித்தார்.அதற்கு நான்,' தலைவர்கள் பதுங்குக்குழிக்குள் மரணமடையக்கூடாது. போர்க்களத்தில் தான் இருக்க வேண்டும். பதுங்குக்குழிக்குள் இருக்கக்கூடாது' எனத் தெரிவித்தேன். இவ்வாறு அவர் கூறினார்.




■ திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ADAF-அனைத்து துறை சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக, 21 அம்சக் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, மாபெரும் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாவட்ட தலைவர் சதீஷ்குமார் தலைமை வகித்து, தமிழ்நாடு சத்துணவு பணியாளர் ஒன்றியத்தின் மாநில செயலாளர் ஆனந்த், மாநில மகளிர் அணி செயலாளர் லெட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்து, திருச்சி மாவட்ட ADAF-கள அமைப்பாளர் அன்பரசு கோரிக்கை விளக்க உரையில் பழைய ஒய்வு திட்டத்தை நிறைவேற்ற கோரி ஆர்ப்பாட்ட உரை ஆற்றினார். முடிவில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற பணியாளர் சங்கத்தின் சார்பில், கோபால்சாமி அவர்கள் நன்றி கூறினார். இக்கோட்டத்திற்கு நூற்றுக்கு அதிகமான அனைத்து துறை கிராம உதவியாளர், வேளாண்மை துறை, கால்நடைத்துறை, சத்துணவு பணியாளர், அங்கன்வாடி பணியாளர், ஊர் புற நூலகர், எம் ஆர் பி செவிலியர் உள்ளிட்டு, சிறப்பு காலம் வரை ஊதியத்தில் பணிபுரியும் அனைத்து வகை அரசு பணியாளர்களும் கலந்து கொண்டு சங்கங்களின் நிர்வாகிகள் சிறப்பித்தனர்.



■ தேனி மாவட்டம், 200. போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரண்மனைப்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் (ஷிமிஸி) பணிகள் தொடர்பாக, நடைபெற்று வரும் சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.




■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தவீர திருத்தம் 2026 (SIR) தொடர்பாக வாக்கு பதிவு அலுவலர்கள், உதவி வாக்கு பதிவு அலுவலர்களுடன் அலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்மாவட்ட ஆட்சித்தலைவர் ஜே.பிரவீன்குமார் தலைமையில் நடைபெற்றது



■ யோகி ஆதித்யநாத் ஆளும் உத்திரபிரதேசம் மாநிலத்திலிருந்து கொடைக்கானல் வருகை புரிந்த அம் மாநிலத்தின் பாரதிய ஜனதா கட்சியின் துணைத் தலைவர் தினேஷ் சர்மா அவர்களை பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணை தலைவர் மருத்துவர் மதன்குமார் அவர்களது அறிவுறுத்தலின்படியும், பாரதிய ஜனதா கட்சியின் கொடைக்கானல் நகரத் தலைவர் சரவணன் அவர்களது ஆலோசனை படியும் அக்கட்சியின் சார்பாக பொன்னாடை போர்த்தி சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது. அதில் கட்சியின் நகர பொதுச் செயலாளர் மணிவாசவன் மற்றும் மாவட்ட, நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மேலும் அனைத்து நிர்வாகிகளும் அவருடன் பிரதம மந்திரியின் மன் கி பாத் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# தொப்பம்பட்டி கீரனூரில் மறைந்த தேமுதிக தலைவர் பத்மபூஷன் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் இரண்டாம் ஆண்டு குருபூஜை விழா



கீரனூர் டிச.29-

திண்டுக்கல் மேற்கு மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய தேமுதிக சார்பில் மறைந்த தேமுதிக தலைவர் பத்மபூஷன் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் இரண்டாம் ஆண்டு குருபூஜை விழா கீரனூர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய தேமுதிக கழகச் செயலாளர் சி.தேன்பழனிச்சாமி தலைமை தாங்கினார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர்கள் கே.எஸ். களஞ்சியம், சுரேஷ் தலைமை பொதுக்குழு உறுப்பினர் வே.கி. பழனிச்சாமி, கீரனூர் பேரூர் செயலாளர் எ.சுப்பிரமணி, பழனி முன்னாள் நகர கழக செயலாளர் பி.கே. ஈஸ்வரமூர்த்தி, பழனி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் தளபதி, கொடைக்கானல் கீழ் மலை ஒன்றிய கழகச் செயலாளர் செல்வமுத்து குமார், பழனி முன்னாள் நகர அவைத் தலைவர் கதிர்வேல், பழனி நகர துணைச் செயலாளர் மயில்சாமி, தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய அவை தலைவர் கார்த்திக் குமார், தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய பொருளாளர் கேசவன், தொப்பம்பட்டி மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர்கள் சிவசங்கர், பெரியசாமி, கந்தசாமி, மகுடீஸ்வரி, மாவட்ட பிரதிநிதிகள் முருகானந்தம், து க்கையண்ணன்,பொன்ராஜ், முன்னாள் ஒன்றியப் பொருளாளர் மகுடீஸ்வரன், முன்னாள் துணை செயலாளர்கள் காளிமுத்து, திருவான்டைசாமி, மகளிரணி ஒன்றிய செயளாளர். மகேஸ்வரி, பேரூர் கழக அவைத்தலைவர் சிராஜ்தீன் பொருளாளர் துரைராஜ், துணைச் செயலாளர்கள் துர்க்கையண்ணன், கன்னி முத்து, கர்ணன், பரமன், மாவட்ட பிரதி நிதிகள் மகுடீஸ்வரன், ஆறுமுகம், முனியப்பன், மதன்குமார் கிளை கழக நிர்வாகிகள் முருகேசன் கன்னிமுத்து, நீலன், மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியின் முடிவில் 50 0 க் கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000